**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| In the Court of | District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai |
| Calendar | CC.No.10/2018 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| | Prosecution |
| Deposition for witness for | Defence |
| | Court |
| Name | Kalpana- PW 1 |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21/10/2021

முதல் விசாரணை

நான் அரியப்பாக்கம் கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் கூலி வேலை செய்துகிறேன். 14.04.2016ம் தேதி சமார் இரவு 11.30 மணியளவில் எங்கள் வீட்டில் தூங்கிகொண்டிருந்தபோது எனது கணவருக்கு இயற்கை உபாதைக்காக வெளியே கூட்டி வந்தபோது அப்பொழுது மார்க் என்ற மணி வீட்டின் பின்புறம் இருந்து என்வீட்டிற்குள் வரமுயற்ச்சி செய்துக்கொண்டிருந்தார். இதைக்கண்டு பார்த்தபோது அவர் உடனே ஓடிவிட்டார். இதுகுறித்து நான் அப்பொழுது அவர்கள் வீட்டில் கேட்டேன் ஆனால் அவர் வீட்டில் தான் இருந்தார் என்று அவரது தம்பி தினேஉஷ் சொன்னார் பின்பு என்னுடைய கண்ணத்தில் அடித்தார் பிறகு தினேஉஷ் என்னை கொலைசெய்துவிடுவேன் என்று மிரட்டினார். நான் ஏற்கனவே முதலாவது எதிரி மார்க் என்ற மணி தவறாக நடந்துகொள்வதாக புகார் கூறியும் அதைப்பற்றி கேட்கவில்லை என்று கேட்டபோது என்னை மீண்டும் அடிப்பதற்கு கை ஓங்கினார். அந்த சமயத்தில் இதைப்பற்றி தெரிந்து அங்கு வந்த எனது உறவினர்கள்இது குறித்து பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அறிவுறுத்தியதின் பேரில் நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது அதசா.ஆ1 ஆகும். தற்பொழுது நீதிமன்றத்தில் முதலாவது எதிரி மணி ஆஜராகியுள்ளார். இரண்டாவது எதிரி நீதிமன்றத்தில் இருந்தால் நான் அடையாளம் காட்டுவேண். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| In the Court of | District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai |
| Calendar | CC.No.10/2018 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| | Prosecution |
| Deposition for witness for | Defence |
| | Court |
| Name | சிரஞ்சீவி- PW2 |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21/10/2021

முதல் விசாரணை

நான் அரியப்பாக்கம் கிராமத்தில் வசித்துவருகிறேன். நான் கூலி வேலை செய்துகிறேன். 14.04.2016ம் தேதி சுமார் இரவு 11.00 மணியளவில் நான் நீரிழிவு நோயாளி என்பதால் அடிக்கடி சிறுநீர் கழிப்பதற்காக வரும்போது சம்பவத்தன்று இரவு 11.00 மணியளவில் என் வீட்டிற்கு பின்புறம் உள்ள சின்னகேட்டை தாண்டிவர ஆஜர் எதிரி முயற்ச்சி செய்துகொண்டிருந்தார். மேற்படி எதிரியின் வீடு 4 வீடு தள்ளி உள்ளது. எதற்காக வருகிறாய் என்று கேட்டபோது ஆஜர் எதிரி தன் வீட்டிற்கு ஓடிவிட்டார். இது குறித்து எதிரியின் வீட்டிற்கு கேட்கசென்ற எனது மனைவியை திட்டி ஆஜர் எதிரியின் தம்பி தினேஉஷ்குமார் இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் கொலைசெய்துவிடுவேன் என்று மிரட்டினார். இது சம்மந்தமாக என்மனைவி பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.